சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – நிலமாற்றம் – நாமக்கல் மாவட்டம் – புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், நவணி தோட்டக்கூர்பட்டி கிராம ஊராட்சிக்குச் சொந்தமான நிலம் புல எண்:138/2A1B–ல் உள்ள மொத்தப் பரப்பான 0.33.37 ஹெக்டேர் நிலத்தினை சென்னை மாகாண முன்னாள் முதல்வர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் பெயரில் அரங்கம் கட்டுவதற்காக செய்தி மக்கள் தொடர்பு துறைக்கு நிலமாற்றம் செய்ய அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅ.தி.3) துறை**

அரசாணை (நிலை) எண்.115

நாள் 21.10.2022
சுபகிருது, ஐப்பசி மாதம் 4ந் தேதி
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1 மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1439/2022/ஊநி4 , நாள் 19.04.2022

2 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந. க.எண்.27768 / 2022 / ஊராட்சி 3.3, நாள் 01.07.2022

--------

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் 01.07.2022–ஆம் நாளிட்ட கடிதத்தில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் 06.09.2021 அன்று நடைபெற்ற 2021–2022–ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது "தமிழுக்கும் மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூக நீதிக் கோட்பாடுகளுக்காகச் சட்ட வடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களது சேவைகளை நினைவு கூறும் வகையில் நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் ஓர் அரங்கம் அமைக்க ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்" என்று அறிவித்ததன்பேரில், மேற்படி அரங்கம் அமைக்க நாமக்கல் மாவட்டம், சேலம்–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றிற்கு இடையேயான நிலம் அடையாளம் காணப்பட்டு மேற்படி நிலமானது செய்தி மக்கள் தொடர்பு இயக்குநரால் பார்வையிடப்பட்டு வருவாய்த் துறையினர் நிலத்தினை அளவீடு செய்து வரைபடம் தயாரித்து வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேற்படி இடத்தினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களின் பெயரில் மாற்றம் செய்து தருமாறு கோரி கடிதம் வரப்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்கள் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதல்வர் திரு.ப.சுப்பராயன் அவர்களுக்கு அரங்கம் அமைப்பது தொடர்பாக தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் புல எண்.138/2 A1Bல் 0.33.37 ஹெக்டேர் பரப்பளவு என்றும், மேற்படி நிலமானது நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், நவணி தோட்டக்கூர்பட்டி கிராம ஊராட்சி மன்றத் தலைவரின் பெயரில் உள்ளதாகவும் இது தற்போது வருவாய் துறையினரால் மூன்று ஊராட்சி உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அரங்கம் அமைக்கப்பட அடையாளம் காணப்பட்ட புல எண்.138/2 A1Bல் 0.33.37 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடமானது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும்

மேற்காணும் நிலத்தின் புல எண்.138/2 A1B ல் 0.33.37 ஹெக்டேர் (35520.904 சதுர அடி) விஸ்தீர்ணத்தின் வழிகாட்டி மதிப்பு ரூ.35,52,000/- என்றும் தெரிவித்துள்ளார்.

3. அரசாணை (நிலை)எண்.209, ஊரக வளர்ச்சி (சி4) துறை, நாள் 17.08.2000இல் குறிப்பிட்டுள்ளபடி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அசையா சொத்துக்களை பிற துறைகளுக்கு மாற்றம் செய்யும் பொழுது தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்துக்களை கொண்டடைவு செய்தல் மற்றும் மாற்றம் செய்தல்) விதிகள் 2000-த்தின் பிரிவு 5(1)ன்படி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாத்தியப்பட்ட நிலத்தின் மதிப்பு ரூ.50,000/-க்கு மேல் இருக்கும் பட்சத்தில் அனுமதி வழங்குவதற்கு முன்பு அதற்கான முன்மொழிவினை அரசிற்கு அனுப்பி முன் அனுமதி பெற்றுப் பின்னர் பிற துறைகளுக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, நாமக்கல் மாவட்டத்தில் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதல்வர் திரு.ப.சுப்பராயன் அவர்களது சேவைகளை நினைவு கூறும் வகையில் அன்னாரின் பெயரில் அரங்கம் அமைக்க ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த நிலப் பரப்பு 0.33.37 ஹெக்டேர் (35.520.904 சதுர அடி) தற்போதைய வழிகாட்டி மதிப்பீட்டின்படி ரூ.35,52,000/- மதிப்புள்ள புல எண்.138/2 A1B என்ற நில்த்தை நிலக்கிரயமின்றி இலவசமாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்துக்களைக் கொண்டடைவு செய்தல், மற்றும் மாற்றம் செய்தல்) விதிகள் 2000ன் விதி 5-ன்படி நடவடிக்கை எடுத்து, நிலமாற்றம் செய்ய நாமக்கல் மாவட்ட ஆட்சியருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை 15.
நாமக்கல் மாவட்ட ஆட்சியர், நாமக்கல் மாவட்டம்.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -9
மாநில கணக்காயர், சென்னை-18.

**நகல்**
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை -9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை-9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை முதன்மைச் செயலாளரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை-9
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, சென்னை-9
நிதித்(ஊ.வ) துறை, சென்னை -9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்
கோ.எண்.2766664/மா.அ.தி.3/2022

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.